TEJAS Thiagarajar College Journal ISSN(Online): 2456-4044
June 2015 Vol.1(2), PP13-18

**ந.பிச்சமூர்த்தி எனும் மா கவியின் கவிஆளுமை**

(எதிர்காலத்தில் இயங்கும் கவிதைகள்)

- து. முத்துக்குமார்

உதவிப்பேரசிரியர், தமிழ்த்துறை, தியாகராசர் கல்லூரி, மதுரை – 09.

தமிழில் ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாக கவிதை என்பது நமக்கு செய்யுள் வடிவமாகவே வந்துள்ளதை நாம் அறிவோம். ஐரோப்பிய இலக்கியங்கள் 18ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் ஆங்கிலம் கற்றறிருந்த தமிழ் இலக்கிய ஆர்வலர்களால் வாசிக்கவும் தமிழில் மொழிபெயர்க்கவும் படுகின்றன. இதன் உந்துதலில் தமிழின் செய்யுள் மரபை மாற்றியமைத்துப புதுக்கவிதை கோட்டை கட்டிய வாசலில் முதலில் நிற்பவர் மகாகவி பாரதியே. வசன கவிதை எனும் புதுக்கவிதை பாரதியின் 'தனிமை இரக்கத்தில்' முகிழ்த்து ந.பிச்சமூர்தியில் "காதலாக" பூக்கிறது. பாரதிக்குப் பின் சரியாக இருபது வருடம் கழித்து ந.பிச்சமூர்த்தியின் காதல் கவிதை பாரதியின் வசன கவிதையில் இருந்த முழு உருவம் பெற்ற புதுக்கவிதையாக வெளிவருகிறது. பாரதியிடம் விளைந்த மரபும், நவீனமும் கலந்த கவிதை நடை பிச்சமூத்தியிடம் ஆழமாக வேரூன்றி வளர்கிறது. எழுத்தாளர் 'எழுத்து' என்ற இதழின் ஆசிரியர் சி.சு.செல்லப்பா ந.பிச்சமூர்த்தி கவிதைத் தொகுப்பிற்குத் தரும் முன்னுரையில் 'மா கவிஞன்' என்றே பிச்சமூர்த்திக்கு அடையாளம் தருகிறார். புதுக்கவிதை பிதாமகன் எனப் பலராலும் கூறப்படும் ந.பிச்சமூர்த்தி தான் புதுக்கவிதை எழுதக்காரணமான தூண்டுதல் பற்றி இவ்வாறு குறிப்பிடுகிறார். 'என் புதுக்கவிதை முயற்சிக்கு யாப்பு மரபே காணாத அமெரிக்கக் கவிஞர் வால்ட்விட்மன் எழுதிய புல்லின் இதழ்கள் என்ற கவிதைத் தொகுப்புதான் வித்திட்டது. அதைப்படித்தபோது கவிதையின் ஊற்றுக்கண் தெரிந்தது. தொடர்ந்து பாரதியின் வசனகவிதையைப் படிக்க நேர்ந்தது. என் கருத்து வலுவடைந்தது. 1934இல் சோதனை ரீதியான கவிதைகளை எழுதத் தொடங்கினேன்' என்கிறார். பிச்சமூர்த்தியின் துவக்ககால கவிதைகளே கூட குறியீடாகவும், படிமமாகவும் அமைந்துள்ளன. ஏன் அவரது முதல் கவிதையான காதல் கவிதையையே அதற்கு சாட்சியாகக் கூறலாம். பாரதியின் கட்டற்ற அழகியல் பிச்சமூர்த்தியின் கவிதைகளுக்குள் அழகியல்தன்மைக்குள் கவிதையைத் தைத்து அதன் தழும்பு தெரியாமல் அதாவது கவிஞனிடம் உருவான சுவடு இல்லாமல் தன்னை விடுதலையாக்கிக் கவிதைக்குள் கரைந்து கொள்வது நிகழ்ந்துள்ளது. ந.பிச்சமூர்த்தியின் முதல்

கவிதையான காதல்
மாந்தோப்பு வஸந்தத்தின் பட்டாடை உடுத்தியிருக்கிறது
மலர்கள் வாசம் கமழ்கிறது
என்ன மதுரம்! என்ன துயரம்!
காதற் கனல் பெருக்கெடுத்துவிட்டது
கரைகள் உடைந்து போயின

நெஞ்சத்தின் வேர்கள் கருகுகின்றன
…
தனிமை உயிரைத் தணலாக்கி விட்டது
தணல் உன்குரலால் ஜ்வாலையாகிறது

இக்கவிதையில் மாந்தோப்பு வஸந்தத்தின் பட்டாடை " என்னும் சொல்லில் காலத்தை ஜடப்பொருளாக்கி அதனை இயற்கையோடு இணைந்து ஒன்றாக மாற்றும் படிமம் கவிதைக்குரல் அடங்கியிருக்கிறது. இதனை ந.பிச்சமூர்த்தி புதுக்கவிதைகளின் உருவம் நடைபற்றிக் கூறும் கருத்தைக் கொண்டே விவரிக்கலாம்.

ஸ்தூலமான சொல்லுக்கும் நயத்திற்கும் அப்பாற்பட்ட பொருளும் அமைதியும் உண்டு என்பது என் நம்பிக்கை. அந்த அடிப்படைகளைத் தொட்டு நான் கவிதை அமைக்க முயன்றிருப்பதால் மருந்தும், நிழலும் போன்ற இசைவை இவற்றில் காணலாம். ஸ்தூலத்தைவிட சூக்குமத்திற்கு அதிக சக்தி உண்டென்று அணுயுகம் காட்டிவிடவில்லையா? இக்கருத்திலிருந்தே "காதல்" கவிதையில் புறவயமான எளிய ஓசை நயமான சொற்களை அதன் வீதிரத்தன்மைக்கு நகர்த்தியிருக்கிறார். சொற்களுக்குள் அடங்கியிருக்குங்ம அதன் ஸ்தூலமான தன்மை மாந்தோப்பு வஸந்தத்தின் பட்டாடை உடுத்தியிருக்கிறது என்ற மென்மைத் தன்மையிலிருந்து க்காவூ… க்காவூ என்ற உணர்ச்சியை உள்ளடக்கி வெளிவிடும் ஓசைக்குள் கவிதையின் தீவிரம் வளர்த்தெடுக்கப்படுகிறது. பிச்சமூர்த்தி தனது முதல் புதுக்கவிதையிலேயே இம்மாயத்தை நிகழ்த்துகிறார். அதனாலேயே புதுக்கவிதைமரபு அவரிலேயே துவங்குகிறது.

அவரது 'தீக்குளி' கவிதைக்குள் தத்துவ இழை கண்ணுக்கே தெரியாமல் கரைந்துள்ளது.

"அட கதையே
விளக்குப் பூச்சியா மாய்வதற்குஉதாரணம்?
இதோ ஒரு சிறகு பொசுங்குகிறது
விடேன் என்ற சங்கற்பம்
தீயில்குளிப்பேன் என்ற உயிராசை
சக்தி தூண்ட, துணிவுபொங்க
அதோ சென்று விட்டது
அதான் உருமாற்றம் தெய்வமுயற்சி
அத்வைத சாதனை
ஜோதியின் அகண்டம் ஜீவாணுவை அழைக்கிறது"

ஒன்று இரண்டாகிய, ஒன்று வேறொன்றாகிய எதுவுமில்லாத ஒரு வாழ்வு. இறதியைநெருங்க அதனுள் காக்க தழுவ ஆசை எல்லோருக்கும் முடிவிலியான இறுதிதான் என்பது தொலைந்து போகாத இறுதி. கவிதைக்குள் தீ என்றசொல்லும் உயிரானது என்ற சொல்லும் மௌனத்தின் ஆர்ப்பரிக்கும் அர்த்தபுலத்தில் கெட்டிதட்டியுள்ளன. வாழ்வின் மெல்லிய சிறகு அடையமுடியா கனவின் மீதான ஆசையில் சதா துடிதுடித்துப் பறக்கிறது. நாம் நினைக்கும் உருமாற்றம் ஒன்றல்ல.

இறகசைப்பின் எல்லைவரை அது வேறாவேறாக உருமாற்றம் கொண்டு நீண்டு கொண்டே செல்கிறது. சோதியில் கரைந்த பின்னும் உருமாற இயலா அனுபவம்.

"காலை ரவி வந்து
படம் விரித்தாடினான்
கரிச்சான் குரல் கொண்டு
ஒளியைத் துரத்தின
இசையையும், ஒளியையும்
பொன்னையும் பெண்ணையும்
எருவாக்கிப் போட்டோம்
அழகின் கதிர்கள் அறுவடையாயின
அள்ளிப் புசித்தோம். - பொன்ஏர்

இயற்கையை கண்முன் விரியும் அழகியலோடு ந.பி. வரிகளில் கவிதைப்படுத்துகிறார். இதன்முன் பதிவாக பாரதியின் காட்சி, காற்று கவிதை நிற்கிறது. இசை, ஒளி, மனம் இவை நிலத்திற்கு எருவாக உள்புதைதல் இயற்கையை மலர்மலர்தல்போன்ற செயல்பாட்டிற்குள் காட்சிப்படுத்தும் கவி மனதில் சூழ்தீவிர செயல்பாடுதான். அது ந.பி.யின் பொன்ஏர் கவிதையில் அத்தீவிரத்தன்மை பதிந்திருக்கிறது. பூமியும், பெண்ணும் உற்பத்திக்கு உறவுக்கு அடையாளமானவர்களின் அவையும், அதில் விளையும் விளைச்சலும் பூஜிக்கத்தக்கவை. கனவு போன்ற கவிதைக்குள் விவசாய அழகியல் ஒவ்வொன்றாக உருவெடுக்க இங்கு அறுவடை சய்வது கனவு போன்ற அழகின் கதிர்களைத்தான். இந்த அழகியல் நேர்த்தியை பாரதியைக் கடந்த பிச்சமூர்த்தியிடம்தான் காணமுடிகிறது.

கூட்டிலிருக்கும் கிளிக்குஞ்சே!
கண்மூடி ஏங்காதே
உன்பஞ்சரம் சிறையல்ல
கம்பிகள் இறகின் வைரியல்ல
மலரின் மூச்சிலிருந்து மாட்டின் குமுறல் வரையில்
நாதமே அசைகிறது
கிளியே ஈசனே ஊனாய் உருவாய் மலர்ந்திருக்கிறான்
புலன்களொரு ஏணி
ஏணியே ஈசன்

கிளிக்குஞ்சு என்னும் கவிதை மட்டுமல்ல பிச்சமூர்த்தியின் நிறைய கவிதைகளுக்குப் பாரதியே முன்னோடியாய் பிச்சமூரத்தி கவிதை பரம்பரை என்பதற்குப் பாரதி முன்நிற்கிறார். பாரதியின் 'விட்டு விடுதலையாகி நிற்பாய்' என்பது போன்ற கவிதைகளின் சீரிய மறு உருவமாய் கிளிக்குஞ்சு கவிதை ந.பி.யிடம் பிறக்கிறது. தன்னிலிருந்து விடுதலையாதல் என்பதனை கிளிக்குஞ்சுவில் ந.பி.பேசுகிறார். உடல் என்பது சிறையல்ல உடலைத் தாண்டிய மனம் என்னும் கூடு ஒருசிறு எல்லைக்குள் கூண்டிற்குள் வாழும் கிளியைப்போல சுழன்று கொண்டே வருகிறது. வாழ்வில்

விடுதலை எனும் நம்பிக்கையின் உரு இங்கு ந.பி.யால் ஈசன் எனும் வடிவில் வைக்கப்படுகிறது. அவரின் தத்துவார்த்த நம்பிக்கை இக்கவிதைச் சுரத்தில் வெளிப்படுகிறது. ஊனுடலே மூலதனம், ஆலயம் என்று ஒன்றாக மாறி அதுவே வாழ்வின் ஒளியை மறைக்கும் திரையாக விழும் பட்சத்தில் அதனைத் தாண்டிய மேலேறுவதற்கான ஏணியைத் தன் புலன்களிலிருந்தோ அல்லது ஆன்மிக உருவான ஈசனில் அவர் தேடுகிறார். பாரதிக்கு பராசக்தி அல்லது கண்ணனைப்போல.

கைவல்ய வீதி கவிதை ந.பிச்சமூர்த்தியின் உச்சமான கவிதைகளில் ஒன்று

அமைதிக்குப் பேர்போன
ஆறடி வீதி
இரவின் அமைதிக்குப் பேர்போன வீதி
மோட்டார் எமன் நிழல்
பாராத வீதி
கையை
தலையணையாய் வைத்து
துயில்பவர்கள் கும்பலுக்குப்
பேர்போன வீதி
கள்ளன்போல் நடுநிசியில்
கோடை மழைவந்தால்
உடலின் சூட்டால்
போர்வையைப் போர்த்து
ஊமையாய் உறங்கும் கலைஞர்கள் வாழும் கைவல்ய வீதி
கைவல்யவெளியில்
கடவுளைக் கண்டேன்
கண்ணைச் சிமிட்டினார்

பிச்சமூர்த்தி தன்னுடைய ஆன்மீகம் தத்துவார்த்த உலகத்தைக் கண்ணுக்குத் தெரியாத பர உலகமாக மட்டும் வரித்துக் கொள்ளவில்லை. மரணத்தின் நிழலில் பயணிக்கும் சாலைகளைத் தங்களது இருப்பிடங்களாகக் கொண்ட மக்களின் மேன்மை நிலை அவர்களின் அன்றாட வாழ்வினும் எல்லா வகையான தடைகளிலும் பின்னோக்கிச் செலகிறது. கவிதை பேசுவது வெறும் ஆன்மிகம் வாழ்வு மட்டுமல்ல லௌகிக வாழ்வே கூடு மீடேற்றம் இல்லாத சூழல் அவர்களின் வாழ்வின் சகல வீதிகளிலும் நிறைந்துள்ளன என்பதை தண்ணீருக்குள்ளே/ சுவாசிக்க முடியாது/ குச்சுக்குள் கோடையில் / தூங்கவும் முடியாது / என்கிறார். பால்காரி வீட்டு எருமையும், கோடை மழையும் போதும் அவர்களின் நித்தியமான எளிமையான வாழ்வை சிதைப்பதற்கு அக்குடியான மக்களின் இவ்வுலக வாழ்வின் மேன்மையை அடைய பயணத்தைச் சீர்குலைக்க என்கிறார். ஆனால் அக் கைவல்ய வீதிகளில் தரித்திரத்தில் தூங்கும் கலைஞர்கள், மக்களைக்காண கடவுள் வலம் வருகிறார்.

பாரதிக்குப் பின்பு ந.பிச்சமூர்த்தியின் புதுக்கவிதையில் உருவமும், உள்ளடக்கமும் நேர்த்தியும் வளர்ச்சியையும் மிக உச்ச அளவிற்கு அடைந்திருந்தன. இருவரும் ஆன்மிகத்தை, உயர்ந்த லட்சிய மனோபாவங்களைத் தெருக்கோடியில் வாழும் மனிதர்களின் பிரச்சனைகளைப் பேசுகின்றனர்.ஆனால் ந.பி. சொற்களின் மிக கவனமான தேர்வால் அளவான பிரயோகத்தால் புதுக்கவிதையை அதன் சொல்லாடலைச் செழுமைப்படுத்துகிறார். பாரதி பேசிய பசி என்பது தேசம் தழுவிய அல்லது உலகம் தழுவிய விடுதலை நோக்கோடு பேசியவை. ஆனால் ந.பி. தெருவில்பெட்டிக்கடை தொழில் செய்யும் ஒருவனின் மனநிலையையும், அவனிடம் பொருள் வாங்கவியலாத தரித்திரமனநிலையையும் பசியையும் அவர்களுக்கேயான விசயமாகப் பேசுகிறார். அதற்கான தெரிவான உள்ளடகத்தை அதன் சூழலுக்குள் கட்டி வைத்திருக்கும் மேலும் அதன் படிமத்தன்மை வேறுவேறு அர்த்தபுலங்களுக்குள் கவிதை இட்டுச் செல்வதாகவும் உள்ளது. வாழ்வின் பல பகுதிகளையும் பேசிய ந.பி. “சாகுருவி” கவிதையில் மரணம் பற்றியும் இருள் பற்றியும் பேசுகிறார். கவிதையில் பூடகத்தன்மை சொற்களில் கையேறி வந்துள்ளது. மரணம் நித்தியமானது என்றும் அது நிகழ்வா, தொன்மமா? எதன் மீதிருந்து இம்மரணம் பயணிக்கிறது. சாகுருவி எனும் பறவை குறியீடாகச் சொல்லப்படுகிறது. அக்குறியீடு உருவாக்கும் முடிச்சுகள் திரட்சியான விவாதத்தை நமக்கு அளிக்கின்றன. சாவை கொண்டுவந்த சாகுருவி மறைந்துவிடுகிறது. ஆனால் சாவு மறையவில்லை. இருள் என்பது அதன் குறியீடு அது மரணத்தின் நிழலா? ஒரு புதிரைத் தனக்குள் எப்போதும் நிறைத்து வைத்திருக்கும்மனித மனத்தின் இன்னொரு பகுதியா? என்பது போன்ற வாழ்வின் மீதான விசாரணைகளை நிகழ்வதான கவிதைகளை ந.பி. அளித்துள்ளார். பிச்சமூர்த்தியின் கவிதைகள் முரசு கொட்டாத கவிதைகளாக வெளிவந்தன. புதுக்கவிதைக்கான மிக ஆழ்ந்த அமைதி கொண்ட தனிமையோடு அவை வெளிவந்தன. முரசு கொட்டியிருந்தால் வெளிப்படையாக பேசியிருந்தால் 1960களில் உருவெடுத்த நவீன கவிதையின் பிதாமகன் கவிஞர் பிரமிள்க்கு முன்னோடியாக ந.பிச்சமூர்த்தி இருந்திருக்க மாட்டார். ந.பி.யின் கவிதை ஆளுமை வெறும் வார்த்தைகளில் மட்டுமில்லை வாழ்விலும் உள்ளது. பாரதி பித்தனாக, கவிஞனாகவே வாழ்ந்து மடிந்ததினாலேயே கவிஞனாக கவிதைகள் இன்றும் நிற்கிறது.

ந.பிச்சமூர்த்தி வழக்குரைஞர் தொழில் செய்தாலும் தனக்குள் இருக்கும் கவிமன நிலையோடு தான் வாழ்கிறார். தொழிலைத் தொடரமுடியாமல் வறுமைக்குள் தன் குடும்பமே சிக்கித் தவித்தாலும் குடும்பத்தை விட்டு துறவு மனநிலையில் வீட்டைவிட்டு வெளியேறினாலும் அவருககுள் இருக்கும் கவிஞன் அவரைவிட்டு வெளியேறவில்லை. அவரின் கவிதைகளும் கவி வாழ்வோடு இணைந்து வெளிவந்த கவிதையாக உள்ளன. கவிதை வேறு வாழ்க்கை வேறு என்று வாழவில்லை ந.பி. அதனால்தான் அவர் புதுக்கவிதைகளின் பிதாமகனாக தமிழ்க்கவிதைச் சமூகத்தில் அறியப்படுகிறார். சி.சு.செல்லப்பா அவர்கள் குறிப்பிடுவது போல் ந.பிச்சமூர்த்தி ‘மா’ கவி தான் என்பதை புதுக்கவிதை வரலாறு சொல்கிறது.

**சான்றாதார நூல்கள்**

1977 புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும், வல்லிக்கண்ணன், அகரம் பதிப்பகம், சிவகங்கை
1985 பிச்சமூர்த்தி கவிதைகள், க்ரியா பதிப்பகம், சென்னை.